**திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017**

திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆம் திகதிய 3119 எஸ்ஆர்ஜ மற்றும் 3120 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் 4.04 (அ) பிரிவின் IV ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது நிகழ்ச்சித்திட்டத்தின் மீளளிப்பு இணைப்புச் சுட்டிகளை அடிப்படையாகக் கொண்டு திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சாலும் ஏனைய அமுலாக்கல் முகவர்களாலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் மீதான கருத்துரைகளை மாத்திரம் கொண்டுள்ளது. மீளாய்வாண்டிற்கான தனிப்பட்ட அமுலாக்கல் முகவர்களினது நிதிக்கூற்றுக்களின் மீது எனது அறிக்கைகள் தனியாக வழங்கப்படுகின்றது.

## 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் பிரகாரம், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் கீழுள்ள 09 ஏனைய நிறுவனங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. எவ்வாறாயினும், ஆரம்பத்தில் அமுல்படுத்தல் முகவரொன்றாக இனங்காணப்பட்ட இலங்கை அச்சக நிறுவகம் மீளாய்வாண்டின் போது தவிர்க்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்ட அமுலாக்கல் ஆவணத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியர்சந்தை கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புகள் போன்றவற்றிற்கான தரம், பொருத்தத்தன்மை, அணுகுதல், இனங்காணல் போன்றவற்றை மேம்படுத்துதல் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 125,916 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 961.2 மில்லியனானதுடன் அதில் ரூபா 13,100 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 100 மில்லியன் முறையே ஒவ்வொன்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினாலும் நிதியளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 5,423 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 41.40 மில்லியன் ஜேர்மனி அரசாங்கம் மற்றும் கொரியா ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி ஆகியவற்றால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, ரூபா 26,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஏனைய மூலங்கள் ஊடாக நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இவ் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இவ் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய

கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தினுடைய ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு மற்றும் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் மற்றும் ஏழு பகுதியளவிலான தன்னாட்சி நிறுவனங்களிற்கான செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன தொழிற்பயிற்சித் துறை மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சின் 08 நிறுவனங்களின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏனைய அபிவிருத்தி பங்குதாரரால் நிதியளிக்கப்பட்ட தொகையினை தவிர்த்தது தகுதியான செலவினத் தொகை மீளாய்வாண்டின் போது மீளப்பெற்ற பெறுகைகளை விஞ்சியிருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் மொத்தச் செலவினத்தின் ஒருங்கிணைந்த கூற்றுக்களில் காட்டப்பட்ட 2017 சனவரி 01 இல் உள்ளவாறான ரூபா 109.02 மில்லியன் கூட்டுத்தொகையான காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் ஆரம்ப மீதி, தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் திறன் துறை அபிவிருத்தி பிரிவின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த செலவினத்தின் ஒருங்கிணைந்த கூற்றில் காட்டப்பட்ட ரூபா 80.04 மில்லியன் கூட்டுத்தொகையான காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் பின்தொடர் மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

(ஆ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 34.24 மில்லியன் தொகையான பணிக்கொடை செலுத்துகை மொத்தச் செலவினத்தின் ஒருங்கிணைந்த கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மேலும், பதிததிலுள்ள பிழைகள் காரணமாக மொத்தச் செலவினத்தின் ஒருங்கிணைந்த

கூற்றுக்களில் காட்டப்பட்ட வாடகை, வீதவரிகள், தபால் மற்றும் தொலைத்தொடர்பு மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்கள் மீதி ஏற்பட்ட கிரயங்கள் ரூபா 2.32 மில்லியனால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) இலங்கை ஜேர்மன் தொழிநுட்ப பயிற்சி நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிழையான கணக்கீட்டு பதிவுகள் காரணமாக, மொத்தச் செலவினத்தின் ஒருங்கிணைந்த கூற்றில் காட்டப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் ரூபா 24.97 மில்லியனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத ஆவணரீதியான சான்றுகள்

2018 யூலை 15 வரையிலும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு மற்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால், மொத்த செலவினத்தின் ஒருங்கிணைந்த கூற்றில் காட்டப்பட்ட தகவலினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட எண்களுடன் இணக்கஞ்செய்ய முடியாதிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| **மூலம்** | **மத்திய மட்டத்திற்கான கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை** | | **மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட மொத்த ஒதுக்கீடு** | **பயன்படுத்திய நிதிகள்** | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | **மீளாய்வாண்டின் போது** | **2017 திசெம்பர் 31 வரை** | |
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ. டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஏடிபீ | 100.0 | 13,100 | | | 87.01 | 12,246 |
| ஐடிஏ | 100.0 | 13,100 | 11,782 | 9,554 | 41.23 | 6,063 |
| இலங்கை அரசாங்கம் | 519.8 | 68,093 | | | 187.70 | 28,691 |
| ஜேர்மனி அரசாங்கம் | 15.4 | 2,017 | - | - | 7.47 | 1,232 |
| கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கி | 26.0 | 3,406 | 500 | 220 | 7.26 | 1,077 |
| ஏனையவை | 200.0 | 26,200 | - | - | - | - |
| **மொத்தம்** | **961.2** | **125,916** | **12,282** | **9,774** | **330.67** | **49,309** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 12,282 மில்லியன் தொகையான பாதீட்டு ஒதுக்கீட்டில், மொத்த ஒதுக்கீட்டின் 79.6 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 9,774 மில்லியன் தொகையொன்று பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம், ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,739.22 மில்லியனுக்குச் சமமான (ஐ.அ.டொலர் 50 மில்லியன்) எஸ்டீஆர் 32.60 மில்லியன் மீளளிப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்தத் திகதியில் உள்ளவாறு ரூபா 5,965.17 மில்லியனுக்குச் சமமான (ஐ.அ.டொலர் 45 மில்லியன்) எஸ்டீஆர் 29.34 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக செயலாற்றல்

------------------------------------------

நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், கடன்களின் வருமானத்தை பயன்படுத்தி, 08 அமுல்படுத்தல் முகவர்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் திறன் துறை அபிவிருத்தி பிரிவினூடாக 09 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் 73 நடவடிக்கைகளினை அமுல்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியில் கடன் வருமானத்தைப் பயன்படுத்தி 03 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட 23 செயற்பாடுகளில், 03 செயற்பாடுகளின் இலக்குகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் ஆவணத்தின் பிரகாரம், தீவில் தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி மற்றும் பயிற்சிகளின் தரத்தை முன்னேற்றி அங்கீகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி விளைவாகக் காணப்படல் வேண்டும். ஆகையினால், தொழிற் பயிற்சி நிறுவகங்களினால் நாடளாவிய ரீதியில், நடாத்தப்பட்ட பாடநெறிகளில் தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் நாட்டில் நடாத்தப்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி செயற்பாடுகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய தொழில்கல்வி தலைமை மட்டம் வரை முன்னேற்றப்படல் வேண்டும். அமுல்ப்படுத்தல் முகவர்களினால் நடாத்தப்பட்ட 3,719 கற்கைப் பாடநெறிகளில், 1,454 கற்கை பாடநெறிகள், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய தொழிற் கல்வி தகைமையின் மட்டம் வரை அங்கீகாரம் பெறப்பட்டிருக்காமை வெளிப்படுத்தப்பட்டது. ஆகையினால், முன்னேற்ற நோக்கங்களுக்காக பயிற்சி பாடநெறிகளினை மீளாய்வு செய்வதற்கு உரிமை அமைச்சு நடவடிக்கையினை எடுத்திருக்காமையினை சுட்டிக்காட்டுகின்றது.

(இ) தேசிய தொழில்சார் தகைமைகளினை எதிர்கொள்ள பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்துகின்ற தொழில்சார் பயிற்சி நிறுவகங்களின் தர முகாமைத்துவ முறைமையின் அபிவிருத்தி மற்றும் உறுதிப்படுத்தலுக்கு மூன்றாம் நிலை மற்றும் தொழில் பயிற்சி ஆணைக்குழு பொறுப்பாகக் காணப்படுகின்றதுடன் மீளாய்வாண்டிற்காக அவற்றின் மீது மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கிடைக்கப்பபெற்ற தகவலின் பிரகாரம், நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற 1,614 தொழில்கள் பயிற்சி நிறுவனங்களில் மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்ட அவ்வாறான 74 சான்றுப்பத்திரங்கள் உள்ளடங்களாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில்சார் பயிற்சி நிறுவகங்களுக்கு தர முகாமைத்துவ முறைமையின் மீது 170 சான்றிதழ்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ii) தர சான்றிதழ் நோக்கங்களுக்கு தொழில்சார் பயிற்சி நிறுவகங்களினால் பின்பற்றப்பட்ட முறைமைகளினை மீளாய்வதற்கு முன்னணி கணக்காய்வாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை

எடுத்திருந்த போதிலும், உத்தியோகத்தர்களிடையே கடமைகள் சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட வெளிவாரியான 10 முன்னணி கணக்காய்வாளர்கள் எவ்வித கணக்காய்வினையும் மேற்கொண்டிராத அதேவேளை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஏனைய சர்வதேச ரீதியான முன்னணி கணக்காய்வாளர்கள் மீளாய்வாண்டின் போது 27 தொடக்கம் 35 வரையான கணக்காய்வுகளின் வீச்சில் கணக்காய்வுகளினை நடாத்தியிருந்தனர்.

(ஈ) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், இலங்கை ஓசன் பல்கலைக்கழகம் மீளாய்வாண்டின் போது 549 மாணவர்களின் உள்ளீர்ப்புக்கு இலக்கிட்டிருந்த அதேவேளை 07 சான்றுப்பத்திர பாடநெறிகளுக்கு 243 மாணவர்களினை பதிவுசெய்திருந்தது. மேலும், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையிலுள்ள இலங்கை ஓசன் பல்கலைக்கழகத்தின் கற்கை நிலையங்களில் மீளாய்வாண்டின் போது எவ்வித டிப்ளோமா மட்ட பாடநெறிகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்ட ஆவணத்தின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊழியச்சந்தைக் கேள்வியை எதிர்கொள்வதற்கு வினைத்திறனான கல்வி முறைமையை கட்டியெழுப்புதல் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி மற்றும் ஆதரவான கொள்கைகள், முறைமைகள் மற்றும் கட்டமைப்புக்கள் போன்றவற்றிற்கான தரம், பொருத்தத்தன்மை, அணுகுதல், இனங்காணல் போன்றவற்றை மேம்படுத்துதல் என்பன எதிர்பார்க்கப்பட்டன. ஆகையினால், இளம் தலைமுறையினர்க்கு புதிய சந்தை வாய்ப்புக்களினை ஆராய்வதற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச தொழிற் சந்தையின் மீது ஆய்வுகளினை நடாத்துவது அவசியமாகக் காணப்படுகின்றது. அவற்றின் மீது மேலும் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொழில்சார் பயிற்சியின் 18 துறைகளில் பயிற்சி பாடநெறிகளினை நடாத்துவதனை தொழிற் பயிற்சி அதிகாரசபை தொடர்ந்திருந்த போதிலும், திறன் இடைவெளிகளினை இனங்காண்பதற்கு மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் ஆலோசணையுடன் தொழிற் சந்தையின் நிலைமையினை ஆராய்வதற்கு மற்றும் நீண்ட, மத்திய மற்றும் குறுங்கால பயிற்சி பாடநெறிகளுக்கான இலக்குகளினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களினை அதிகரிக்கும் நோக்கத்திற்கு புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை இனங்காணல், அபிவிருத்தி மற்றும் அமுல்ப்படுத்தலுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் அவற்றிக்கு ரூபா 03 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களினை இனங்காணல், அபிவிருத்தி மற்றும் அமுல்ப்படுத்தலுக்கு எவ்வித ஆவணங்களும் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்கான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், தொழிற் சந்தையின் கேள்வியினை எதிர்கொள்வதற்கு வருடாந்தம் புதிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டியதுடன் அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உட்சேர்க்கப்படும் மாணவர்கள் அதிகரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் றிக்கிலில்லகஹகந்த மற்றும் தெஹியத்தகண்டியிலுள்ள பயிற்சி நிலையங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது புதிய நிகழ்ச்சித்திட்டங்களினை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் விபரமான செயற்பாட்டு திட்டங்களின் பிரகாரம், சிறப்புரிமை மாணவர்களின் கீழ் 2,100 பேருக்கு உதவிபுரிவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் 2014 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியின் போது அவர்களுக்கு நிதிசார் உதவிகளினை வழங்குவதற்கு ரூபா 1,144.80 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 வரையிலும் அந்த நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி துறையின் வேலைவாய்ப்புத் திறனின் மட்டத்தினை அதிகரிக்கச்செய்ய தனியார் பொது கூட்டாண்மையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுப்பதற்கு பொறுப்புடையதாகக் காணப்படுகின்றது. மேலும், அதிக கேள்வியுடைய பாடநெறிக் கற்கைகளினை கொடைமுனைவு செய்வதற்கு மற்றும் தேசிய தொழில்சார் தகைமைகள் நிகழ்ச்சித்திட்டங்களின் 05 மற்றும் 06 ஆம் மட்டங்களினை எதிர்கொள்ள பொது மற்றும் தனியார் கூட்டாண்மை மீதான உடன்படிக்கையின் கீழ் கல்லூரிகளினை ஸ்தாபிப்பதற்கு தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 7 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது புதிய பல்கலைக்கழக கல்லூரிகளினை ஸ்தாபிப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களம், தொழிற் பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பன ரூபா 367.98 மில்லியன் கிரயமொன்றில் மீளாய்வாண்டின் போது சிவில் நிர்மாண வேலைகளுக்கு 09 ஒப்பந்தங்களினை வழங்கியிருந்தது. ஒப்பந்தார்களின் மனித மற்றும் ஏனைய வளங்கள்களின் பற்றாக்குறை மற்றும் பொதுத் திறைசேரியிலிருந்து நிதிகளினை விடுவிப்பதற்கு காலம் எடுத்தமை காரணமாக, அந்த வேலைகளின் கீழ் 2017 திசெம்பர் 31 வரையில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட 05 ஒப்பந்தங்கள் 2018 யூன் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 295.77 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயமொன்றில் தொழிற் பயிற்சி அதிகாரசபைக்கு 02 கட்டிடங்களினை நிர்மாணிப்பதற்கு 2014 ஆகஸ்ட் 05 இல் நடாத்தப்பட்ட அதன் கூட்டத்தில் அமைச்சரவையின் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும், காணிகளினை கையளிப்பதிலுள்ள தாமதங்கள் மற்றும் தீர்மானத்தினை அமுல்படுத்துவதிலுள்ள அதிகாரசபை முகாமைத்துவத்தின் சர்ச்சைகள் காரணமாக 2017 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அகன்கமயிலுள்ள ஹோட்டல் பாடசாலையொன்றினை புனரமைப்பதற்கான ஆரம்ப திட்டம் அதனைத்தொடர்ந்து அதை நவீன ஹோட்டலொன்றாக அபிவிருத்தி செய்வதற்கு மாற்றப்பட்டிருந்தமையினால், 2014 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்ட ரூபா 110.35 மில்லியன் தொகையான ஒப்பந்தக் கிரயம் கூட ரூபா 122.75 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. மேலும், ஹோட்டலுக்கு சமையலறையொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 4.92 மில்லியன் கிரயமொன்றில் 2017 நவம்பர் 14 இல் தனியானதொரு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. தீர்மானங்களினை மாறியதன் விளைவொன்றாக, 2015 மற்றும் 2016 இல் ரூபா 10.93 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட பயிற்சி உபகரணங்கள் 2018 யூன் 30 வரையிலும் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்தில் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. மேலும், ஹோட்டலுக்கு ரூபா 13.52 மில்லியன் கிரயமொன்றில் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம், பொருந்துக்கள் மற்றும் ஹோட்டல் உபகரணங்கள் நிர்மாண வேலைகள் 2018 யூன் 30 வரையிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்காமையினால் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்படுகின்றது. கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், ஹோட்டலொன்றாக அதனை செயற்படுத்துவதற்கு

அதிகாரசபையில் காணப்படும் செயற்பாட்டு மற்றும் நிதிசார் இயளளவுகளின் பற்றாக்குறை காரணமாக, மூன்றாம் தரப்பொன்றிற்கு இந்த ஆதனத்தை குத்தைக்கு விடுவதற்குரிய செயற்பாட்டை அதிகாரசபை மேற்கொள்கின்றது. மேற்குறித்த தகவலினை கருத்திற்கொள்கையில், அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை அடைந்துகொள்வதற்கான சாத்தியக்கூறு கணக்காய்வில் கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றது.

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், கடந்த காலங்களில் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் உயர் விகித பதவியணியினர் புரள்வு செயற்திட்டத்தின் செயலாற்றலினை மோசமாக பாதித்திருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ அலகின் பெறுகை நிபுணர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் நிதிசார் பகுப்பாய்வாளர்களின் பதவிகள் மீளாய்வாண்டு முழுவதும் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட 06 பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு 31 விரிவுரையாளர்கள் மற்றும் 21 செய்முறையாளர்களினை (Demonstrators) ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 02 வருடங்களுக்கு மேலாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. மேலும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சி பிரிவின் கல்விசார் பதவியணியின் 59 பதவிகளிலுள்ளது. வெற்றிடங்கள் மற்றும் பணிப்பாளர் பதவி (பயிற்சி) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சி) என்பன 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருட காலப்பகுதியொன்றுக்கு மேலாக நிரப்பப்படாது தொடர்ந்தும் காணப்பட்டது.

(இ) வரிசை அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தின் பிழையான விளக்கத்தின் அடிப்படையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் ஓசன் பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியினர்க்கு திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயலாற்றல் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் தொடர்புடைய அளவுவிதிகளின் கீழ் செயலாற்றலினை மதிப்பீடு செய்யாது மீளாய்வாண்டின் போது ரூபா 133.29 மில்லியன் தொகையான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் பதவியணியினரின் திறன் அபிவிருத்தி நோக்கங்களுக்கு ரூபா 01 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 11 போதனையாளர்கள் மாத்திரம் பயிற்சியளிக்கப்பட்டடிருந்ததுடன் அவற்றிற்கு ரூபா 0.29 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் வரையிலும் தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கான மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அதிகாரசபையின் போதனையாளர்களுக்கு வேண்டப்படும் தகைமைகளுடன் எவ்வித தரவு தளமும் பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.5 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) படன்கல பல்கலைக்கழக கல்லூரிக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 59.53 மில்லியன் பெறுமதியுடைய பயிற்சி உபகரணங்கள், ஆய்வு கூட்டங்களினை நிறுவதற்கு

நடவடிக்கை எடுப்பதிலுள்ள தாமதங்கள் காரணமாக, 03 வருடங்களுக்கு மேலாக விளைவற்று தொடர்ந்தும் காணப்பட்டது.

(ஆ) செயற்திட்ட கண்காணிப்பு அலகின் பதவிகளின் பிரகாரம், 2015 யூலை 02 இல் ரூபா 1.92 மில்லியன் கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட 18 கணனிகள் படன்கல பல்கலைக்கழக கல்லூரிக்கு மாற்றஞ்செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் தொடர்புடைய சொத்துக்கள் 2018 மே 31 இல் வரையிலும், படன்கல பல்கலைக்கழக கல்லூரியின் மொழி ஆய்வுகூடத்திற்கு கிடைக்கப் பெற்றிருக்காததுடன் அதனை புலனாய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் 2016 இல் ரூபா 99.57 மில்லியன் கிரயமொன்றில் 66 உபகரண வகைகளினைக் கொள்வனவு செய்யப்பட்டு உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொடர்புடைய பயிற்சி பாடநெறி 2018 மே வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் தொடர்புடைய உபகரணங்களை 2018 மே 29 வரை 1½ வருடங்களுக்கு மேலாக குறைப்பயன்பாட்டுடன் தொடர்ந்தும் காணப்பட்டது. மேலும், அவ்வாறான அனைத்து உபகரணங்களினதும் உத்தரவாத காலப்பகுதி காலாவதியாகியிருந்தது.

## 3.6 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி அமைச்சு செயலாளரின் 2016 யூன் 10 இன் 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 வரை நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளக கணக்காய்வாளரொருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டல்களின் 4.2.1 ஆம் பந்தி மற்றும் பொருட்கள், வேலைகள் மற்றும் சர்வதேச அபிவிருத்தி கழகத்தின் ஆலோசனையல்லாத சேவைகளின் பெறுகைகளுக்கான வழிகாட்டல்களின் 1.18 ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு செயற்திட்ட கண்காணிப்பு அலகினால் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாண இலக்கம் 751 இன் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்துக்களினை பதிவு செய்வதற்கு செயற்திட்ட கண்காணிப்பு அலகினால் இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், செயற்திட்ட கண்காணிப்பு அலகிலிருந்து தொடர்புடைய அமுல்படுத்தல் முகவர்களுக்கு மாற்றஞ்செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பிலான தகவல்கள் மெய்மையாய்வு நோக்கங்களுக்கு உடனடியாக கிடைக்க கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது செயற்திட்ட கண்காணிப்பு அலகிற்கு வரிசை அமைச்சிலிருந்து மாற்றஞ்செய்யப்பட்ட ரூபா 2.76 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் மீது செயற்திட்ட கண்காணிப்பு அலகினால் எவ்வித பதிவுகளும் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) படன்கல பல்கலைக்கழக கல்லூரிக்கு நிகழ்ச்சித்திட்டத்தினால் கையளிக்கப்பட்ட 40 இருப்பு வகைகள் பல்கலைக்கழக கல்லூரியினால் பேணப்பட்ட இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.